NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 26 September 2022

# உன்னத நிலைக்கு உயர்த்திய உழைப்பு



மோனலிசா

*இளையர்களின் உழைப்பையும் மேம்பாட்டையும் சிறப்பிக்கும் நோக்கில் உன்னதத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கம் 1992ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் விருதுகள் வழங்கி வருகிறது.*

*கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற விழாவில் சிண்டாவின் வரலாற்றிலேயே ஆக அதிகமான எண்ணிக்கையில் 782 பேர் விருது பெற்றனர். அவ்வாறு விருது பெற்ற சிலர், தங்கள் கல்விப் பயணத்தைப் பற்றியும் சந்தித்த சவால்கள் பற்றியும் இங்கு பகிர்ந்துகொள்கின்றனர்.*



## சோதனையை எதிர்கொள்வதே சாதனை

தந்தையின் தொழிலில் தோல்வி ஏற்பட்டது, அதே ஆண்டில் அவர் விபத்துக்குள்ளாகி வேலைக்குச் செல்லாதது என பார்த்திபன் சர்ச்சில் குடும்பத்தின் நிதிநிலைமை மோசமடைந்தது. அந்த ஆண்டு தேசிய கல்விக் கழகத்தில் இருந்த அவரால் தொடர்ந்து பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை.

அப்போது அவர் நிரந்தரவாசி என்பதால் கல்வி அமைச்சின் நிதியுதவித் திட்டங்களுக்கும் அவர் தகுதிபெறவில்லை.

இச்சூழலில் வேறு வழியின்றி படிப்பை நிறுத்தினார். பிறகு சிங்கப்பூர்க் குடிமைத் தற்காப்புப் படையில் தன் தேசிய சேவையை முடித்தார். தற்காப்பு அமைச்சின் ஒரு பிரிவின் தளபதியாகச் சேர விருப்பப்பட்டபோதும் குறைந்தது ஒரு நைட்டெக் சான்றிதழ் தகுதி தேவைப்பட்டது. அந்த ஆசையும் ஈடேறாமல் போனது.

தன்னுடைய குடியுரிமையைப் பெற்ற பிறகு 2020ஆம் ஆண்டில் சிண்டாவின் உதவியுடன் விமான இயந்திரவியல் தொழில்நுட்பத் துறையில் தன் நைட்டெக் கல்வியைத் தொடர்ந்தார் பார்த்திபன்.

"தேசிய கல்விக் கழகத்தில் 5,000 வெள்ளிக்கும் அதிகமான எனது பள்ளிக் கடனைச் செலுத்த சிண்டா உதவியது. என் படிப்பு முடியும்வரை சிண்டா வழங்கிய நிதியுதவி எனக்குப் பெரிதும் கைகொடுத்தது," என்றார் அவர்.

தேசிய கல்விக் கழகத்தில் உன்னதத் தேர்ச்சி பெற்ற இவர், தற்சமயம் சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரியில் இயந்திரப் பொறியியல் துறையில் படித்து வருகிறார். 'சிறந்த பட்டதாரி விருது' உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ள 27 வயது பார்த்திபன், வாழ்க்கையில் எதிர்பாராத சோதனைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு கல்வியைத் தொடர்வது நம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் என்பதற்கு ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறார்.

## இரட்டைப் பட்டப்படிப்பில் உன்னதத் தேர்ச்சி

'ஸ்டெம்' எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் துறைகளில் பெண்கள் முன்னிலை வகிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் சுரபி மாலனி. 23 வயதான இவர் 'தொழில்நுட்பத்தில் தலைசிறந்த எஸ்ஜி 100 பெண்கள்' பிரிவில் 'தொழில்நுட்பத்தில் முதல்தர 18 இளம்பெண்கள்' பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக சமூக அறிவியல் துறையிலும் பொறியியல் துறையிலும் இரட்டைப் பட்டப்படிப்பு மேற்கொண்ட இவர் இரண்டிலுமே உன்னதத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

பட்டப்படிப்புப் பிரிவில் சிண்டா உன்னத விருது வென்றுள்ள இவர், சிண்டாவின் 'வாலேடிக்டாரியன்' ஆகவும் நியமனம் பெற்றிருந்தார்.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் 'ஸ்டெம்' தொடர்பான வாய்ப்புகளை பெண்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் 'தொழில்நுட்பத்தில் பெண்கள்' என்னும் குழுவின் இணை நிறுவனராக இருந்தார். இக்குழுவுடன் சேர்ந்து தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு வழிகாட்டுதல் திட்டங்கள், இணையம்வழி கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் உள்ளிட்ட பல நிகழ்வுகளை ஒருங்கிணைத்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் பெண் பொறியாளர்கள் சங்கத்தின் செயலவைக் குழுவிலும் பணிபுரிந்தார்.

கணினி அறிவியல் துறை மாணவியாக தன்னுடைய அனுபவங்களையும் கருத்துகளையும் உலகளாவிய இணையம்வழி கருத்தரங்கில் பகிர்ந்துகொண்டுள்ளார்.

தொண்டூழியத்தில் நாட்டம் உள்ள இவர் 'யூத் கார்ப்ஸ்' என்னும் அமைப்பில் இணைந்து சிறப்புத் தேவைகளுடைய இளையர்களுக்கு உதவி செய்து வருகிறார்.





## குறிக்கோள் ஈடேற துணிந்திட வேண்டும்

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான சாரா பீவி, தன் கனவை நோக்கிய பயணத்திற்கு வயது ஒரு தடையல்ல என்கிறார்.

தொழில்நுட்பக் கல்விக் கழகம் நைட்டெக் பிரிவில் உன்னத விருதினைப் பெற்றிருக்கும் இவர், தனது 40வது வயதிற்குப் பின்னர் இடைக்கால பணிமாற்றம் செய்யத் துணிந்தார். தனியார் நிறுவனம் ஒன்றில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக மூத்த சில்லறை வர்த்தக உதவியாளராகப் பணிபுரிந்து, 2020ஆம் ஆண்டில் தாதியாகும் கனவில் அத்துறையில் பயிலத் தொடங்கினார். சக மாணவர்கள் தன்னைவிட 20 வயது குறைந்தவர்களாக இருந்தது ஆரம்பத்தில் தனக்குள் சற்று தயக்கத்தை ஏற்படுத்திய தாகவும் பல ஆண்டுகளுக்குப் பிறகு படிப்பதும் தேர்வு எழுதுவதும் மிகவும் சிரமமாக இருந்ததாகவும் கூறினார்.

உறுதியுடன் தொடர்ந்த இவருக்கு, பெற்றோரும் பிள்ளைகளும் மிகுந்த ஆதரவு அளித்தனர். அவர்கள் அளித்த ஊக்கத்தால் சிறிது காலத்திலேயே படிக்கவும் வகுப்பறைச் சூழலில் இருக்கவும் பழகிக்கொண்டார். சக மாணவர்களும் ஆசிரியர்களும் தன் கனவை அறிந்து ஒத்துழைத்ததாகவும் கூறினார் சாரா.

தொற்று காலத்தில் பிள்ளைகள் மட்டுமன்றி தனக்கும் இணையம்வழி பாடங்கள் நடந்தது சவால்மிக்கதாக இருந்தபோதும் பிள்ளைகளுடன் சேர்ந்து படித்த நாள்கள், அவர்களுக்குள் அதிக நெருக்கத்தை ஏற்படுத்தியதாக நினைவுகூர்ந்தார்.

தற்சமயம் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையில் முழுநேர தாதியாகப் பணிபுரியும் இவர், இந்தப் பணி தனக்கு மிகுந்த மனநிறைவை அளிப்பதாகக் கூறினார். சூழ்நிலையைக் காரணம் காட்டி கனவைக் கைவிடாமல் உறுதியுடன் தொடரவேண்டும் என்று அறிவுறுத்த விரும்புகிறார் சாரா.

## தடுமாறித் தடம்மாறியவர் மீண்டெழுந்தார்

உன்னத விருது பெற்றுள்ள அமன் சிங் ரஹ்மான், ஒரு கட்டத்தில் தவறான நண்பர்களுடன் ஏற்பட்ட பழக்கத்தால் பிரச்சினையில் சிக்கி சட்டத்தால் தண்டிக்கப்பட்டார். ஒற்றைப் பெற்றோரான தன் தாயார் மற்றும் பாட்டியின் நிழலில் வளர்ந்தவர், தடம் மாறிய தன் பின்விளைவுகளின்வழி தன் தவற்றை உணர்ந்தார்.

சிறுவயது முதலே அவர் குறிக்கோளின்றி இருந்துவர பதின்ம வயதில் தான் செய்த தவறுகளை எண்ணி வருந்தி, தன் வாழ்க்கையைப் பயனுள்ளதாக்க கல்வியே கருவி என முடிவெடுத்தார்.

தன்னுடைய கல்வியைத் தொடர எண்ணி ஜிசிஇ 'ஓ' நிலைத் தேர்வை ஒரு தனியார் மாணவராக எழுதலாம் என்று எண்ணினார். குடும்ப நிதி நெருக்கடியால் அதற்கான கட்டணத்தைச் செலுத்த இயலவில்லை. அப்போது கட்டணம் செலுத்த உதவியது சிண்டா.

'ஓ' நிலைத் தேர்வில் தேர்ச்சி கண்ட பின்னர், ரிபப்ளிக் பலதுறைத் தொழிற்கல்லூரியில் விளையாட்டு நிர்வாகத் துறையில் பட்டயக் கல்வி மேற்கொண்டார் அமன். தன்னைவிட வயது குறைந்த சக மாணவர்களுடன் பயில்வதற்குத் தயங்காமல் ஒரு நண்பராகவும் ஒரு முன்மாதிரியாகவும் விளங்கினார்.

பலதுறைத் தொழிற்கல்லூரி பட்டயக்கல்விப் பிரிவில் உன்னத விருது பெற்ற இவர், வாழ்க்கையில் ஒரு புதிய நம்பிக்கையை இவ்விருது தந்துள்ளதாகக் கூறினார். வருங்காலத்தில் நிதித் துறை ஆலோசகராக விரும்பும் இவர், தற்சமயம் சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத் துறையில் இளநிலைப் பட்டம் படித்து வருகிறார். மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில் தொண்டூழியம் செய்வது தனக்கு மிகுந்த மனநிறைவை அளிப்பதாக 25 வயது அமன் கூறுகிறார்.





## விருதுவென்ற தமிழ் முரசு செய்தியாளர்

சிங்கப்பூரில் தமிழ் மொழிக்காக தொண்டாற்ற தனக்கு மிகவும் ஆசை என்று கூறினார் 19 வயது விஷ்ணுவர்தினி ஆனந்தன்.

சிண்டாவின் உன்னத விருதினை ஜிசிஇ 'ஏ' நிலைப் பிரிவில் பெற்றுள்ளார் இவர்.

ராஃபிள்ஸ் தொடக்கக் கல்லூரியில் உன்னதத் தேர்ச்சி பெற்ற இவர், ஓராண்டு இடைவெளி விட்டு தற்சமயம் தமிழ் முரசு நாளிதழில் செய்தியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

இவர் எதிர்காலத்தில் சிங்கப்பூர் பொதுச் சேவைத் துறையில் கொள்கை உருவாக்கப் பிரிவில் பணிபுரிய ஆவல் கொண்டுள்ளார்.

விஷ்ணுவர்தினி 2019ஆம் ஆண்டில் அரசு நீதிமன்றத்தில் சில காலம் பணிபுரிந்தார்.

அந்த காலகட்டத்தில் பலதரப்பட்ட மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்தது தனக்குள் மிகப்பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கூறினார் அவர்.

வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்திற்குத் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற எண்ணமும் அந்த அனுபவத்தின்வழி தன்னுள் மேலோங்கியது என்றார்.

இதற்கிடையே, தமிழ் முரசில் செய்தியாளராகப் பணிபுரியும் அனுபவம் தன்னுடைய அறிவையும் ஆற்றலையும் வளர்த்துள்ளதாகக் கூறுகிறார் இளையர் விஷ்ணுவர்திணி.

தனிமனிதன், சமூகம், நாடு, உலகம் என தன்னுடைய எண்ணங்கள் பரந்துவிரிந்த நிலையில் பல்வேறு புதிய அம்சங்களை அன்றாடம் கற்றுக்கொள்ளும் வாய்ப்பாக இந்த வேலை அனுபவம் அமைந்துள்ளது என்று கூறுகிறார் இவர்.

## கலைத்துறையில் கால்பதிக்க லட்சியம்

சிறுவயது முதலே கலைத்துறையில் நாட்டம் கொண்டவர் நூர் ஹசினா, 26. தந்தையின் குறைந்த வருமானத்தினால் பல நிதி நெருக்கடிகளைச் சந்தித்தார்.

படிக்கும் காலத்தில் சிண்டாவின் உதவித்தொகை இவருக்கும் இவருடைய சகோதரிகளுக்கும் பெரிதும் உதவியது. உயர்நிலைப்பள்ளிக்குப் பின் அவர் கலைத்துறையைத் தேர்ந்தெடுக்க விரும்பியபோது பெற்றோர் துணை நின்றனர். சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரியில் புத்தாக்க எழுத்துத் துறையில் மூன்றாண்டு பட்டயக்கல்வி படித்த இவர், அப்படிப்புக்கான கட்டணத்தைச் செலுத்த மிகவும் சிரமப்பட்டார்.

வங்கியில் கல்விக் கடன் பெற்றதுடன் பகுதிநேர நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகப் பணிபுரிந்தார். இவரது தாயாரும் இவரின் கல்லூரிக் கட்டணத்திற்காக பகுதிநேர வேலைக்குச் சென்றார். படிப்பையும் பகுதிநேர வேலையையும் சமாளிப்பது கடினமாக இருந்ததாகக் கூறினார் ஹசினா. கலைத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு, சிரமமான அந்த காலகட்டத்தைக் கடந்துவர உதவியதாகக் கூறினார்.

பட்டயக்கல்விக்குப் பின் எந்தத் துறையைத் தேர்ந்தெடுப்பது என்பதில் தெளிவில்லாமல் இருந்தபோது மூன்றாண்டு இடைவெளி விட முடிவெடுத்தார். தனியார் நிறுவனம் ஒன்றில் விளம்பர மேலாளராக இணைந்தார். வாழ்க்கைப் பயணத்தில் அவ்வப்போது குழப்பம் ஏற்படும்போது அவசரப்படாமல் இதுபோன்ற இடைவெளி விடுவது சரியான பாதைக்குச் இட்டுச்செல்லும் என்பதை தான் உணர்ந்ததாகக் கூறினார் அவர். அண்மையில் லசால் கலைக் கல்லூரியில் கலைத்துறையில் இளங்கலைப் பட்டத்துடன் உன்னதத் தேர்ச்சி பெற்றார். இளங்கலைப் படிப்பின் போதும் கல்லூரிக் கட்டணம் கட்டுவதற்காக பகுதிநேர வேலை செய்தார். கலைத்துறையில் வாழ்நாள் முழுவதும் இணைந்திருக்க எத்தகு சவால்களையும் சந்திக்கத் தயார் என்கிறார் இவர்.





## தாய்க்குப் பெருமை சேர்த்த மகன்

இரண்டாம் முறையாக சிண்டா உன்னத விருதை கெஜேந்திரன் பெற்றுள்ளார். இவர் ஒற்றைப் பெற்றோரான தன் தாயின் அரவணைப்பில் மிகுந்த பொருளாதார சிரமங்களுக்கிடையே வளர்ந்தவர். தனக்காக தாயார் அனுபவித்த இன்னல்களைப் பார்த்து வளர்ந்த இவர், அந்தத் தாயின் துயரைத் துடைப்பதற்காகவே கல்வியில் தன் மொத்த கவனத்தையும் செலுத்தினார்.

உயர்நிலைப்பள்ளி காலத்தில் சாதாரண (ஏட்டுக்கல்வி) பிரிவில் பயின்ற பிறகு பலதுறைத் தொழிற்கல்லூரியில் தேர்ச்சி பெற்றார். இதனால் இவருடைய தேசிய சேவையும் பல்கலைக்கழகப் படிப்பும் தள்ளிப்போயின. ஆயினும் அதிக முதிர்ச்சியுடனும் பக்குவத்துடனும் வாழ்வை அணுக இந்நீண்ட பயணம் உதவியதாக கெஜேந்திரன் கூறினார்.

இவ்வாண்டின் பட்டக்கல்விப் பிரிவில் விருது வென்றிருக்கும் இவர், 2016ஆம் ஆண்டு பட்டயக் கல்விப் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சிண்டா உன்னத விருதினையும் பெற்றார். தன்னுடைய இளங்கலைப் பட்டப் படிப்பிற்காக 'கேபிஎம்ஜி சிங்கப்பூர்' எனும் தணிக்கை, வரி மற்றும் ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனத்தின் உபகாரச் சம்பளத்தைப் பெற்றார். இந்த உபகாரச் சம்பளம் தன் தாயின் சுமையை ஓரளவு குறைத்தது என்று நினைவுகூர்ந்த இவர், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் மற்றும் வணிக நிர்வாகத்தில் இரட்டைப் பட்டத்துடன் உன்னதத் தேர்ச்சி பெற்றார்.

தற்சமயம் அதே நிறுவனத்தில் உத்தி ஆலோசக பட்டதாரி ஊழியராகப் பணிபுரிகிறார். கல்வியின் சிறப்பை சிறுவயதிலேயே உணர்ந்த இவர், முதுகலைப் பட்டம் மேற்கொள்ளும் எண்ணம் இருப்பதாகவும் தெரிவித்தார்.



படங்கள்: சிண்டா,
நேர்காணலில் பங்கேற்றவர்கள்

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.